**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17.12.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மண்டல அளவிளான விளையாட்டுப் போட்டிகளுக்கான நிறைவு விழா

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்றன. இவ்விழாவானது 15.12.2022 அன்று நிறைவு பெற்றது. ஆண்டுதோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான இவ்விளையாட்டுப் போட்டிகளில் மாணவ மாணவியர் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பெறுகிறார்கள். நான்கு மண்டலங்களுக்கிடையேயான சுமார் 1300 மாணவ மாணவியர்கள் 42 கல்லூரிகளிலிருந்து பங்கேற்ற பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டிகள் 11.12.2022 முதல் 15.12.2022 வரை நடைபெற்றது. பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர்.வெ.கீதாலட்சுமி அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கினார். முதன்மையர், மாணவ நலமையம், முனைவர்.நா.மரகதம், அவர்கள் வரவேற்புரையாற்றினார். முனைவர்.மு.ரவி, முன்னாள் காவல் துறை, டி.ஜி.பி, காவல் ஆணையர், தாம்பரம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டியும், பரிசுகள் வழங்கியும், அவருடைய கல்லூரி நினைவுகளையும் பகிர்ந்துகொண்டார்.

இப்பெரும் நிறைவு விழாவினை சிறப்பாக நடத்த உதவிய அனைவருக்கும் முனைவர்.ஜே.பி.தேசிக ஸ்ரீநிவாசன், உடற்கல்வி உதவி இயக்குனர் நன்றியுரை ஆற்றினார்.

### விளையாட்டுப் போட்டி முடிவுகள் 2022-23

| | |
|---|---|
| ஆண்களுக்கான தனிப்பட்ட நபர் பிரிவில் தடகள சாம்பியன் | முகமது அனாஸ்.J<br>அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி, திருச்சி |
| பெண்களுக்கான தனிப்பட்ட நபர் பிரிவில் தடகள சாம்பியன் | V.R.சுவாதி. ஸ்ரீ<br>வேளாண்மை கல்லூரி, வாழவச்சனூர் |
| ஆண்களுக்கான ஒட்டு மொத்த பிரிவில் விளையாட்டு சாம்பியன் | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| பெண்களுக்கான ஒட்டு மொத்த பிரிவில் விளையாட்டு சாம்பியன் | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| ஆண்களுக்கான ஒட்டு மொத்த பிரிவில் தடகள சாம்பியன் | வேளாண்மை கல்லூரி, மதுரை |
| பெண்களுக்கான ஒட்டு மொத்த பிரிவில் தடகள சாம்பியன் | அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் தோட்டக்கலைக் கல்லூரி, திருச்சி |
| ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஒட்டு மொத்த பிரிவில் விளையாட்டு மற்றும் தடகள சாம்பியன் | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |

**மக்கள் தொடர்பு அலுவலர்**